**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.42/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பால்பாண்டி | Caste | : |
| Father 's Name / Husband Name | : பஞ்சவர்ணம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலம் பாண்டியன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பஸ் ஸ்டாண்டில் கடலை பருப்பு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2010ம் வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நாய் குரைத்துக் கொண்டிருந்ததால் அதை சத்தம் போட்டேன். பின்பு மதியம் எதிர்வீட்டுக்காரர் சின்னபாண்டி, பெரியபாண்டி ஆகியோர்கள் என் வீட்டு பக்கம் என்னை தரக்குறைவாக பேசி சின்னபாண்டி என்ற பாண்டிதுரை என்பவர் கையில் பிராந்தி பாட்டிலை வைத்து என் மண்டையில் அடித்து உடைத்தார். நான் நேரடியாக காவல் நிலையம் வந்தேன். தகவல் சொன்னேன். என்னை திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். அங்கு எனக்கு தலையில் 7 தையல் போடப்பட்டது. 2 எதிரிகளும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் எனது எதிர்வீட்டுக்காரர்கள். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகாரில் உள்ள கையெழுத்தும்

என்னுடையது. புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் எனது எதிர்வீட்டில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான். பிரச்சினை காலத்தில் எதிரிகள் RO water வேன் மூலம் வைத்து தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த வண்டியை எங்கள் வீட்டு அருகில் நிறுத்துவது சம்பந்தமாக பிரச்சினை இருந்தது என்றால் சரியல்ல. எனது குடிக்கும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது மதியம் 3 மணியிருக்கும் என்றால் சரிதான். காலையில் 7 மணிக்கு ஆடு மேய்க்க சென்ற போது தான் எங்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அதை மனதில் வைத்து நான் குடிபோதையில் எதிரிகளை வைத்திருந்த வண்டி மீது கல்லை விட்டு எறிந்தேன் என்றால் சரியல்ல. அதனால் மற்றவர்கள் என்னை அங்கிருந்து போகச் சொன்னார்கள் என்றால் சரியல்ல. குடிபோதையில் தான் நானே விழுந்து தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நானே காவல் நிலையத்திற்கு நேரில் வந்துவிட்டேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எனக்கு யாரும் உதவி செய்யவில்லை என்றாலும் யாரும் பார்க்கவில்லை என்று சொன்னாலும் எனது மனைவி மற்றும் மகனும் சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தார்கள். நான் காவல் நிலையம் சென்று புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. முதல் சிகிச்சை அளித்த பிறகு தான் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரிந்தவர்கள் எழுதினார்கள் என்றால் அவர் பெயர் அழகர்சாமி அவர் இறந்துவிட்டார். அதன் பிறகு நாங்கள் சம்பவ சமயமும் அதன் பிறகும் நாங்கள் பேசிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரிகள் எங்களை கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டவில்லை என்றால் சரிதான். நான்என்னை தாக்கியதாக சொல்லும் பாட்டிலை நான் காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என்னை போலிசார் புகார் கொடுத்ததற்கு பிறகு விசாரிக்கவில்லை என்றால்

சரிதான். நான் சொன்னமாதிரி சொன்னது போல் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.42/2022**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அந்தோணியம்மாள் | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பால்பாண்டி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலம் பாண்டியன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் தேதி மாதம் நினைவு இல்லை. நாங்கள் ஆடு வளர்த்தோம். எதிர்வீட்டில் எதிரிகள் சின்னபாண்டி, பெரியபாண்டி இருந்தார்கள். நாய் ஆட்டை விரட்டி வந்தது. நாங்கள் யார் நாய் என்று கேட்டோம். அதற்கு எதிரிகள் யாரை வைதார்கள் என்று கேட்டார்கள். எனது கணவர் நாயை தான் வைதார் என்று சொன்னார். நீ எப்படி நாயை வையலாம் என்று அசிங்க அசிங்கமாக பேசினார்கள் சொல்லமுடியவில்லை. சின்னபாண்டி எனது கணவரின் நெற்றியில் பாட்டிலால் அடித்தார். பெரியபாண்டி எனது கணவரின் சென்று அடித்துவிட்டார். அதன் பிறகு அசிங்கமாக பேசினார்கள். அதன் பிறகு நானும் அ.சா.1 எனது கணவரும் எனது மகன் கார்த்திக்கும் காவல் நிலையம் சென்றோம். பின்பு போலிசார் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறியதால் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம். திரும்பி

மறுபடியும் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனது வீடும் எதிரிகள் வீடும் எதிர் எதிர் வீடு என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகள் வீட்டிற்கும் ஆடு வளர்ப்பதனாலும் நாய் வளர்ப்பதனாலும் அடிக்கடி சண்டை வரும் என்றால் சரிதான். அவர்கள் தண்ணீர் வண்டி நிறுத்துவதால் சண்டை வரும் என்றால் சரியல்ல. காலையில் ஆட்டுக்குட்டி பிரச்சினை காலை 8 மணியிருக்கும். நாங்கள் நாய் என்று சொன்னதால் பிரச்சினை என்றால் சரிதான். 2வது சண்டை நடக்கும் போது நாங்கள் வீட்டிற்குள் இருந்தோம் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் வெளியே வந்தேன் என்றால் சரிதான். நான் வீட்டை விட்டு வெளியே வரும் போது எதிர்த்த வீட்டு ஆட்களும் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். எனது கணவருக்கு தலையில் இரத்தம் வந்துகொண்டிருந்ததால் உடனே காவல் நிலையம் அழைத்துக் கொண்டு சென்றேன். எனது கணவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று பின்பு தான் விசாரித்து தெரிந்து கொண்டேன். நான் போலிசாரிடம் எந்த விபரமும் சொல்லிக்கொள்ளவில்லை. போலிசாரும் என்னிடம் எந்த விசாரணையும் செய்யவில்லை. எனது கணவர் கொடுத்த புகாரில் எனது கணவரும் எனது மகனும் கையெழுத்து செய்தார்கள். புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது கணவர் குடிபோதையில் கீழே விழுந்து தான் காயம்என்றும் எதிரிகள் தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கியது பற்றி எந்தபொருளும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் சொன்னமாதிரி சம்பவம் நடைபெறவில்லை என்றும் எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.42/2022**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கார்த்திக்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பால்பாண்டி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(16.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலம் பாண்டியன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் நிமிந்தாள் வேலை செய்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் தேதி மாதம் நினைவு இல்லை. நான் எனது வீட்டு பக்கத்தில்வேலை பார்த்த போது எனது அம்மா போன் செய்து சண்டை நடக்கிறது என்று சொன்னார். நான் சென்று பார்த்தேன் அப்போது எனது அப்பாவுக்கு மண்டை உடைந்திருந்தது. பீர் பாட்டில் சிதறிக் கிடந்தது. நானும் எனது அம்மாவும் எனது அப்பாவை ஸ்டேசனுக்கு கூட்டி சென்றோம். அங்கே மருத்துவமனைக்கு போகுமாறு கூறினார்கள். நானும் எனது அம்மாவும் எனது அப்பாவை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்பு காவல் நிலையம் சென்றோம். புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது வீட்டில் இருந்து 2 தெரு தள்ளி வேலை பார்த்துக் கெண்டிருந்தேன். எனது அம்மா போன் செய்து கூப்பிட்ட பிறகு தான் நான்

வந்தேன் என்றால் சரிதான். நான் வரும் போது சம்பவயிடத்தில் 4 பெண்கள் மட்டும் நின்றிருந்தார்கள். உடனே எனது அப்பாவை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்றுவிட்டோம். அங்கு இருந்து மருத்துவமனைக்கு சென்றுவிட்டு மீண்டும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். புகாரை எங்கு எழுதினோம் என்றால் காவல் நிலையத்திற்குள் டேபிளில் வைத்து எழுதினோம். யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எழுதியவர் காவலரா என்றால் இல்லை. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. இதுசம்பந்தமாக என்னை போலிசார் கூப்பிட்டு விசாரணை எதுவும் செய்யவில்லை. இதுசம்பந்தமாக இன்று சாட்சி சொல்ல அழைத்ததின் பேரில் வந்துள்ளேன். மேற்படி காவல் நிலையத்தில் வைத்து எழுதிய புகாரில் நானும் எனதுஅப்பாவும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம். நானும் எனது அப்பாவும் கையெழுத்து செய்த புகாரை மட்டும் காவல் நிலையத்தில் கொடுத்துவந்தோம். அதன் பிறகு எனது அப்பா மருந்து போடுவதற்காக மட்டும் மருத்துவமனைக்கு செல்வார். மேல் சிகிச்சைக்கு எனது அப்பா செல்லவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவை அடிக்கும் போது நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் நான் மல்லுக்கட்டும் போது பார்த்தேன். எனது அப்பா குடிபோதையில் கீழே விழுந்து தான் காயம் என்றும் எதிரிகள் தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் சொன்னமாதிரி சம்பவம் நடைபெறவில்லை என்றும் எனது அப்பாவுக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை